பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 21 (4-3—68) திங்கள் ★ வெளியூர்: மாசி 22 (5-3-68) செவ்வாய் [இதழ்: 218

அரவங்காடு துப்பாக்கிச் சூடு பற்றி நீதி விசாரணை

மாவட்ட செஷன்சு நீதிபதி எஸ். கணேசன் நியமனம்

சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிக்கை

சென்னை மார்ச் 4

"நீலகிரி மாவட்டம் குன்னூர் — அரவங்காடு பகுதியில் அண்மையில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் ஐந்துபேர் உயிரிழந்ததாகவும், பலர் காயமடைந்ததாகவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது; இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது குறித்து நீதி விசாரணை நடத்த மாவட்ட செஷன்சு நீதிபதியான திரு. எஸ். கணேசன் நியமிக்கப்பட்டிருக்கிறார்; அவருக்கு இந்த விசாரணைக்குத் தேவையான அதிகாரங்கள் அனைத்தும் அளிக்கப்பட்டிருக்கிறது; அவர் விசாரணை நடத்தி அறிக்கை தருவார்; அதன் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்"

என்று இன்று சட்டமன்றத்தில், அவை முன்னவர் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், அறிக்கை மூலம் தெரிவித்தார்.

அரவங்காடு துப்பாக்கிச் சூடு குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரி, 8 பேர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தனர்.

"இந்தத் துப்பாக்கிச் சூடு பற்றி நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சர் அறிவித்திருப்பதால் இனி இந்தப் பிரச்சினை பற்றி எதுவுமே பேசவும் கூடாது—விவாதிக்கவும் கூடாது; எனவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்"

என்று பேரவைத் தலைவர் திரு. ஆதித்தனார் தீர்ப்பளித்தார்.

அண்ணா உடல்நிலை பற்றி எதிர்க் கட்சியினர் அக்கறை

மருத்துவ நிபுணர் குழு அமைத்துப் பரிசீலிக்க கே. விநாயகம் கோரிக்கை

'நிலைமைக்கேற்ப ஆவன செய்யப்படும்' என்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 4—

இன்று சட்டமன்றக் கேள்வி நேரம் முடிந்ததும், காங்கிரசுக் கட்சிக் கொறடாவான திரு. கே. விநாயகம் அவர்கள் எழுந்து பின்வருமாறு தெரிவித்தார்:—

"நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த சில நாட்களாக உடல்நிலை காரணமாக அவைக்கு வரமுடியாத நிலையில் இருந்துவருகிறார். அவருடைய அரசியல் கட்சி வேறாக இருந்தாலும், அவருடைய உடல் ஆரோக்கியத்தில் எல்லாக் கட்சியினருக்கும் அக்கறையுண்டு. அவர் இந்த அவைக்கு வராமல் இருப்பதால், வரவு-செலவுத் திட்ட விவாதத்தைக் கவனிக்க முடியாமல் இருக்கிறது. வரவு-செலவுத் திட்டத்தை அவர்தான் அளித்தார்; அவர்தான் பதில் சொல்ல வேண்டும்; மேலும், முக்கியமான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அவர் இருப்பாரானால், பல முக்கியப் பிரச்சினைகளில் குறுக்கிட்டுப் பல தகவல்களைச் சொல்லமுடியும்: நான் இப்படிச் சொல்லுவதால், இங்குள்ள மற்ற அமைச்சர்களுக்குச் சாமர்த்தியம் இல்லை என்று சொல்லுவதாகக் கொள்ளக்கூடாது; இவர்களும் நல்ல திறமைசாலிகள்தான்; திறமையாக சபையை நடத்திச் செல்லக் கூடியவர்கள்தான்; இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் விரைவில் குணமடைந்து சபைக்கு வர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அவருடைய உடல் நிலையை விரைவில் குணப்படுத்த, தேவைப்பட்டால் வெளி மாநிலங்களிலிருந்துகூட மருத்துவ நிபுணர்களைத் தருவிக்கலாம்; பல மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழு அமைத்துக்கூட, கவனிக்கச் செய்யலாம்; நான் இதைச் சொல்லுவதால், இங்குள்ள டாக்டர்களைக் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதக்கூடாது; 'அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும்' என்பது என் கருத்து; அதையும் உடனடியாக—நாளையேகூடச் செய்து, விரைவில் முதலமைச்சர் அவர்களை முழு நலத்துடன் இந்த அவைக்கு வரச் செய்ய இந்த அரசு என்ன ஏற்பாடு செய்யப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்."

அமைச்சர் நெடுஞ்செழியன்:— "முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை நல்ல முறையிலே மருத்துவ நிபுணர்கள் அக்கறையுடன் கவனித்து வருகிறார்கள். கடந்த பத்தாண்டுக் காலமாக எந்த மருத்துவர் அவருடைய உடல் நிலையைக் கவனித்து வந்தாரோ அவரேதான் இப்போதும் கவனித்துவருகிறார். அப்படி, ஒரு மருத்துவர் குழு அமைத்துக் கவனிக்க வேண்டும் என்று அரசு மருத்துவமனையின் தலைமை அதிகாரி விரும்புவாரானால் அதற்கும் அவர் ஆவன செய்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

காங்கிரசாரே! -- காங்கிரசாரே!!

"காங்கிரசுக் கட்சி வெகு விரைவில் இந்த நாடு முழுமையும் ஆள இருக்கிறது; அதனால் பல மாநிலங்களில் காங்கிரசு அல்லாத கட்சிகள் ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்பட்ட தொழில் மந்தநிலை சீர்படுத்தப்பட்டு விரைவான முன்னேற்றம் காண வழி செய்யப்படும்."

---அ.இ.கா.க. தலைவர் நிஜலிங்கப்பா
(இந்தூரில் மத்தியப் பிரதேசக் காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில்)

இதற்கு அர்த்தம் என்ன?

அறிஞர் அண்ணா-இராஜாஜி கூட்டறிக்கையைக் கண்டு ஆத்திரப்பட்ட தமிழ்நாடு காங்கிரசார் என்ன சொல்கிறார்கள்?

தேசியக் கொடி -- அரசியல் சட்ட எரிப்பு: 'தி.மு.க. தூண்டுதல் கிடையாது'

'கழக அரசின் நடவடிக்கை போதுமானதே'--- மத்திய அமைச்சர் கருத்து

மார்ச் மூன்றும் நாளன்று இந்தூரில், செய்தியாளர்களிடையே பேசும்போது மத்திய உள்துறைத் துணையமைச்சர் வி. சி. சுக்லா குறிப்பிட்டிருப்பதாவது:—

"தேசியக் கொடி—அரசியல் சட்டம் ஆகியவற்றுக்குத் தீ வைத்துக் கொளுத்தி இந்தி எதிர்ப்பினைக் காட்டிய மாணவர்கள்மீது தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை, மத்திய அரசுக்குத் திருப்தியளிப்பதாகவே இருக்கிறது.

"இச்செயலில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் 500 மாணவர்கள், தி.மு.க. சார்புடையவர்கள் அல்லர்; கழகத்தினால் தூண்டிவிடப்பட்டவர்களும் அல்லர்; மாணவர்கள், மாணவர்களாகத்தான் பிரதிபலித்திருக்கிறார்கள்!

"மத்திய அரசு எவ்விதச் சட்ட நடவடிக்கையையும் இந்தப் பிரச்சினையில் எடுக்கத் தேவையில்லை; தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கையே போதும்."

[இப்பிரச்சினை பற்றி தமிழ்நாடு காங்கிரசுக்காரர்கள் தி.மு.க.-வை தொடர்புபடுத்திப் பேசிவருவதும்—சில நாட்களுக்கு முன் அக்கட்சியின் தலைவர் சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொண்டுவந்ததும் இங்கு நினைவு கூரத்தக்கது.]

இருபதாண்டு பெருகிய கொசுக்கள்!

★

சென்னை, மார்ச் 4—

கே. விநாயகம் (காங்):— "சென்னை நகரில் கடந்த ஓராண்டுக் காலமாகத்தான் அதிகமாகக் கொசுத் தொல்லை இருந்துவருகிறது என்பதை அமைச்சர் அறிவாரா?"

அமைச்சர் சாதிக் பாட்சா:— "கடந்த இருபதாண்டுகளாகப் பெருகிவந்த கொசுக்கள் ஒரேயடியாகத் தொல்லை கொடுக்கக் கிளம்பிவிட்டன போலும்!"

—(சட்டமன்றக் கேள்வி நேரம்)

காதில் விழுந்தது!

"தமிழ் நாட்டில் 'கறுப்புக் கோழி பறக்கிறது' தெரியுமா?"

"தெரியாதே! ஏதாவது புதிய கட்சி பிறந்திருக்கிறதா என்ன? நல்ல சின்னமாகத்தான் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!"

"ஒரு நிமிடம்; கேள்வியைத் தவறாகக் கேட்டு விட்டேன்; தமிழ்நாட்டில் கறுப்புக் கொடி 'காட்டப்படுகிறது' தெரியுமா என்றுதான் கேட்க நினைத்தேன்!"

"அதுவும் தெரியாதே! எங்கே காட்டுகிறார்கள்? எதற்காகக் காட்டுகிறார்கள்?"

"பொருத்தமான கேள்விகள்தான்; போகட்டும்; கறுப்பு எந்தப் பின்னணியில் நன்றாக எடுபடும்?"

"இது என்ன கேள்வி? அதற்கு நேர்மாறான வண்ணம் இருந்தால்தான் கறுப்பு நன்றாகத் தெரியும்!"

"சரியாகச் சொன்னாய்; கறுப்புக் கொடி காட்டப்படுவது தெரியவே இல்லை என்றாயே—அது, இதனால்தான்! கறுப்புக் கொடி காட்டவேண்டிய சூழ்நிலை இல்லை; காரணம் இல்லை; காட்டுபவர்களிடமும் தூய்மை இல்லை; எனவே, அவர்கள் காட்டும் கறுப்புக் கொடியும் எடுபடவே இல்லை!"

"அப்புறம் எதற்காகக் காட்டுகிறார்களாம் கறுப்புக் கொடியை? அவர்களது அனைத்திந்தியத் தலைமை கட்டளையேதும் இட்டதா?"

"இல்லை! இவர்கள் எதை எதை முக்கியப் பிரச்சினை என்று கருதுகிறார்களோ அதற்கெல்லாம்தான் மத்திய அமைச்சர்கள் பாராட்டுகளை வழங்குகிறார்களே! படி அரிசித் திட்டமா—திட்டக் கமிஷனே ஒப்புக் கொண்டது! கோவை கொடி எரிப்புச் சம்பவமா—மத்திய அமைச்சரே சொல்லிவிட்டார்—'தமிழக அரசு செய்தது சரி; போதும்' என்று!"

"அப்புறம்? தமிழகத் தலைமைதான் கேட்டுக் கொண்டதா கறுப்புக்கொடி காட்டச் சொல்லி?"

"அதுவும் இல்லை!"

"அப்புறம் ஏன் கறுப்புக் கொடி?"

"இப்படி நம்மைப்போல் எங்காவது ஒரு மூலையிலாவது யாராவது இரண்டு பேர் பேசிக் கொள்கிறோமல்லவா—அதற்காக!"

"அதற்காக மட்டுமல்ல; சுயநலம் ஒன்றிற்காக! வெயில் அதிகம் என்றால் என்ன செய்கிறாய்?"

"துண்டு இருந்தால் துண்டு; அது இல்லையென்றால், வெறுங்கையினால் சூரியனை மறைத்து நிழல் உண்டாக்கிக் கொள்கிறோம்!"

"அதுபோலத்தான் இதுவும்! கழக 'வெயில்' காங்கிரசுக்காரர்களைச் சுடுகிறது! ஒதுங்க, 'இடம்' இல்லை! கைகளால்—கைத் துண்டுகளினால் மறைத்து 'நிழல்' தேடிக் கொள்கிறார்கள்!"

"இதனால், சூரியனை மறைக்க முடிகிறதா என்ன?"

"ஆனால் அவர்கள், அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்களே!"

—எஸ்.ஆர்.

சேலம் உருக்காலை:

டில்லியின் முட்டுக்கட்டை

'நிதி வசதியில்லை' என்ற வாதத்தில் உண்மையில்லை

"நமது மாநிலக் கனி வளங்களை ஆய்வு செய்வதில், இம்முயற்சிகளை மேலும் தொடர்ந்து நடத்திக்கொண்டு போவது ஒருபுறமிருக்க, இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கனிவளங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியாத நமது ஏலாமை வருத்தத்திற்குரிய ஒன்ருகும்.

"கஞ்சமலை இரும்புக் கனியையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் கொண்டு சேலத்தில் உருக்காலை ஒன்றினை நிறுவுவதற்கான திட்டம்—தொழில் நுட்ப வகையிலும், பொருளாதார முறையிலும் ஏற்ற ஒரு சீரிய திட்டமென்று கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் நடத்திய ஆய்வுகளின் வாயிலாகவும், ஆராய்ச்சிகளின் மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; ஆனல் இதன் ஒவ்வொரு கட்டத்திலும், இந்திய அரசின் இணக்கமற்ற போக்கினல் இத்திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படாமல் கட்டிப்போடப்பட்டுள்ளது என்பதை இப்பேரவையினர் அறிவர்.

"நிதி வசதியின்மைதான் இத்திட்டத்திற்குத் தடையாய் நிற்கிறது என்று வாதிப்பதில் உண்மையில்லை; சற்று ஆழ்ந்து நோக்கின், இவ்வாதமும் பொருளற்ற வாதமென்பது புலனுகும்.

"ஒரு துணைக்கண்டம் என்று சொல்லத்தக்க – விரிந்த – நமது இந்திய நாட்டில், பல்வேறு பகுதிகளில் சமநிலையில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று இந்திய அரசு ஓரளவிற்காவது நம்பியிருந்தால், மலையொத்த பொகாரோ திட்டத்திற்கு வகை செய்துள்ள பெரும் நிதி ஒதுக்கத்தை, பொகாரோவில் நடுத்தர உருக்காலைத் திட்டம் ஒன்றையும், தென்னகத்திலே மூன்று உருக்காலைத் திட்டங்களையும் நிறுவுவதற்கு நனகு பயன்படுத்தியிருக்கலாம்; உருக்காலைகளை நிர்வகிப்பதில் காணப்படும் கடும் சிக்கல்களை – நாட்டின் வெவ்வேறுன பற்பல பகுதிகளில் நடுத்தர அளவு உருக்காலைகளை அமைப்பதன் மூலம் பெரிதும் தவிர்த்திருக்கலாம்; சேலம் உருக்காலையும், நாட்டின் சிறப்புக் கலப்பு உருக்குத் தேவைகளை நிறைவேற்றியிருக்கும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், தமிழகச் சட்டமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை அளித்து நிகழ்த்திய உரையில் நிலைமை விளக்கத்துடன் குறிப்பிட்டார்கள்.

இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு-- தமிழக அரசின் திட்டம்

டெல்லி அரசு உதவ மறுத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும்

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படவிருக்கும் தமிழ் மரபினருக்குப் புதுவாழ்வு அளிக்கத் தமிழக அரசு வகுத்திருக்கும் திட்டம் பற்றியும், இதற்கு மத்திய அரசின் உதவி இல்லையேல் நிலைமை என்னவாகும் என்பதைச் சுட்டிக்காட்டியும் முதலமைச்சர் அண்ணு அவர்கள், நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

"விரைவில் பெருமளவில் தாயகம் திரும்பவிருக்கின்ற இலங்கை அகதிகள், இவ்வரசின் சிறப்பான நாட்டத்தை ஈர்க்கும் மற்ருெரு மக்கட் தொகுதியினராவர்.

இந்திய அரசு இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, அடுத்த 15 ஆண்டுகளில் இந்திய நாட்டைச் சேர்ந்த 5 இலட்சத்து 25 ஆயிரம் பேர் நம் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிருேம்.

இவர்களில் ஏறக்குறைய 10,000 குடும்பங்கள், 1968–69-ல் இங்கு வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், காலங்கடத்தாது இவர்களின் நலனிற்கும் மறுவாழ்விற்குமுரிய திட்டங்களைச் செவ்வனே தொடங்கி வைக்கவேண்டியுள்ளது.

இவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்களாய் இருப்பதால், முக்கியமாகத் தேயிலை—காப்பி—ரப்பர் தோட்டங்களிலும், நிலக் குடியேற்றத் திட்டங்களிலும்தான் இம்மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று அரசு கருதியுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க இந்த அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியுள்ளதால், இதனை நாம், நாட்டுக்குப் பொதுவான சிக்கலாகவே அணுக வேண்டும்.

இந்தக் கருத்தில்தான், இந்திய அரசு, திட்டத்திற்கென்று நமக்களிக்கிற இயல்பான உதவிக்குப் புறம்பாக, 'இவ்வகதிகளின் மறுவாழ்விற்கும், நலனிற்கும் தேவைப்படும் நிதிகளை முற்றிலும் வகை செய்தாக வேண்டும்' என்று மத்திய அரசைக் கேட்டோம்.

கடந்த சில திங்கட்களுக்குமுன், தென்னகத்திலுள்ள நான்கு மாநிலங்களுடன் கலந்து இந்திய அரசு சென்னையில் நடத்திய விவாதங்களின்போது நமது கருத்தை இந்திய அரசு ஏற்றுக்கொண்டதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நீலகிரி மாவட்டத்தில், 3,750 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் தேயிலைத் தோட்டங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை நாம் ஏற்கனவே இந்திய அரசின் இசைவிற்கு அனுப்பியுள்ளோம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் பூசிமலைக்குப்பத்தில் 330 ஏக்கர் பரப்பளவில் ஏறக்குறைய ரூ

(5-ம் பத்தி பார்க்க)

தூத்துக்குடித் திட்டத்துடன் உரத் தொழிற்சாலையும் ஏற்படும்

1970-க்குள் திட்டம் நிறைவேற மத்திய அரசு உதவி எதிர்பார்க்கப்படுகிறது

தூத்துக்குடித் திட்டம் பற்றியும் முதலமைச்சர் அண்ணு அவர்கள் நிதி நிலை அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:—

"தமிழக அரசின் வற்புறுத்தலுக்கிணங்கவும், கடந்த ஆண்டில் நடைபெற்ற பொதுமக்களின் கிளர்ச்சிக்குச் செவிசாய்த்தும் இந்திய அரசு—ஒருவாறு கடைசியில், தூத்துக்குடியில் ரூ. 24.40 கோடி செலவில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை 1970-ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கும் வகையில் இந்திய அரசு போதுமான அளவில் நிதி வசதிகளை ஒதுக்கித் தரும் என்று நம்புகிருேம்.

"இத்துறைமுகம் செயலுக்கு வரும்போது, இப்பகுதியில் பல தொழில் திட்டங்களை நிறுவுவதற்கு வாய்ப்புகள் தோன்றும். இங்கே பரந்த நிலப் பகுதிகளைக் கையகப்படுத்துவதற்காகவும், நீர் வழங்குதல்—மின்சாரம், சாலைகள் போன்ற மிகத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்து புதிய தொழிற்கூடங்களை நிறுவுவதற்கு முன்வருகிற தொழில் முனைவர்களுக்கு அங்நிலங்களை ஒதுக்கித் தருவதற்காகவும் ஏற்கனவே நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

"இப்பகுதியில் இப்போது ஆய்விலுள்ள பற்பல திட்டவட்டமான செயற்குறிப்புகளில் இத்தாலிய நாட்டின் உடனுழைப்புடன் 6.4 இலட்சம் டன் அளவில் 'செறிமணி' உர வகைகளை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதும் ஒன்ருகும்."

பின்தங்கிய வகுப்பினர் நலன்களில் தமிழக அரசு காட்டும் அக்கறை

திட்டக் குழுவின் வரையறைக்கு மேலும் நிதி ஒதுக்கப்படும்

தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில்--வாணிகம் தொடங்கக் கடன் வசதி; எல்லாத் தாழ்த்தப்பட்ட மாணவர்கட்கும் இலவசச் சீருடை

பின்தங்கிய—மிகவும் பின்தங்கிய—தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குத் தமிழக அரசு செய்துவரும்—செய்யத் திட்டமிட்டிருக்கும் பணிகள் குறித்து அண்ணு அவர்கள் தமது உரையில் தெரிவித்திருப்பதாவது:—

"பின்தங்கிய வகுப்பினர்களின் நலன், மாநில அரசின் நாட்டத்தில் சிறப்பாகத் தொடர்ந்து இருந்துவருகின்றது.

"1968—69-ம் ஆண்டுத் திட்டத்தில், இத்தலைப்பின்கீழ் திட்ட ஆணைக் குழு, ரூ. 89 இலட்சம் மட்டுமே ஒதுக்குமாறு பரிவுரை செய்திருப்பினும், இத்தலைப்பின் கீழ் உள்ள வேலைத் திட்டங்களின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இம்மாநில அரசு ரூ. 178 இலட்சம் நிதி ஒதுக்கும் வகையில், திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது.

"பொறுப்பேற்றுக் கொண்ட செலவினத்தைச் சேர்த்து, அரிசனங்கள்—பின்தங்கிய வகுப்பினர்கள் இவர்களின் நலனுக்காக ரூ 6.51 கோடி அளவில், 1968—69-ம் ஆண்டின் வரவு--செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

"உதவிச் சம்பளங்கள் வழங்குதல், தற்போதைய திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதைத் தவிர அரிசனங்கள் புதிய தொழில்களிலும், வாணிபத்திலும் ஈடுபடுவதற்குத் துணையாக அவர்களுக்குக் கடன் வழங்கும் ஒரு திட்டத்தை வருகிற ஆண்டிலிருந்து அரசு தொடங்கிவைக்கக் கருதுகிறது; இதற்கென ரூ 1-இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினி சாதனைகளையொட்டி இனி வருகிற ஆண்டுகளில் இது மேலும் விரிவுபடுத்தப்படும்.

"அரிசன நலத்துறை நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் எல்லாச் சிறுவர்களுக்கும் ரூ. 38 இலட்சம் செலவில் ஒரு தொகுதி சீருடை வழங்க வேண்டுமென்றும், அரிசன மாணவர் விடுதிகளில் ஒவ்வொரு மாணவருக்கும் உரிய விடுதிச் செலவை உயர்த்தித் தருவதற்காக ரூ 4.3 இலட்சக் கூடுதல் செலவு செய்வதற்கும் இப்போது அரசாங்கம் முடிவு செய்துள்ளது."

கச்சத் தீவு பற்றி விவாதிக்க நமக்கு உரிமையில்லை

ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது துணை அவைத் தலைவர் தீர்ப்பு

சென்னை, மார்ச் 2—

"இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கை அரசு ஆக்கிரமிப்புச் செய்துள்ளது பற்றி விவாதிக்க வேண்டும்"

எனக் கோரி ச. சோ. கட்சியைச் சேர்ந்த கே. ஆர். நல்லசிவமும், பாலசுப்பிரமணியமும் சட்டமன்றத்தில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தனர்.

"இந்தப் பிரச்சினை வேருெரு வெளிநாட்டுக்கும்—மத்திய அரசுக்கும் உரிய விவகாரமாக இருப்பதால், மத்திய அரசே இதனைப் பற்றி விவாதிக்கும் பொறுப்புடையதாகும்.

"மத்திய அரசுக்குப் பொறுப்பான விவகாரங்களையும் வெளிநாட்டுத் தொடர்புடைய விவகாரங்களையும் இந்த மன்றத்தில் விவாதிக்கக் கூடாது — என்று ஏற்கனவே இதே மன்றத்தில், 1950-ம் ஆண்டில் இரண்டு முறை தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்புக்களைப் பின்பற்றி நானும், இத்தீர்மானத்துக்கு அனுமதியளிக்க மறுக்கிறேன்"

என்று, துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் தீர்ப்பளித்தார்.

துணை அவைத் தலைவர் தீர்ப்பளித்த பின்னரும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பல உறுப்பினர்கள், 'ஒழுங்குப் பிரச்சினை' என்று சொல்லிப் பேச முற்பட்டனர்.

உடன் அமைச்சர் கருணநிதி எழுந்து அவைத் தலைவரைப் பார்த்து, 'தாங்கள் தீர்ப்பு அளித்த பின்பு, அந்தத் தீர்ப்பின் மீதே இவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிருர்களா?' என்று வினவினர்.

துணை அவைத் தலைவர்:—"இந்த மன்றத்தில் பல உறுப்பினர்கள் 'ஒழுங்குப் பிரச்சினை' என்று கூறிப் பேச முற்படுகிருர்கள். ஒழுங்குப் பிரச்சினைக்குரியதல்லாதவற்றையும் பேச ஒரு வாய்ப்பாக, 'ஒழுங்குப் பிரச்சினை' என்ற சொற்களைப் பயன்படுத்துகிருர்கள். அப்படி அவர்கள் எழுந்து பேசுவது, ஒழுங்குப் பிரச்சினைக்குரியதல்லாததாக இருக்குமானல், அவர்கள் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருவது பற்றியும், இந்த அவையின் ஒழுங்கையும் பண்பையும் காப்பாற்ற ஒரு முறை வகுப்பது பற்றியும் நான் யோசிக்கவேண்டி யிருக்கும்."

[இந்த நேரத்தில் திரு. கே. ஆர். நல்லசிவம் எழுந்து, 'எங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்காமல் மறுக்கப்பட்டதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிருேம்' என்று கூறி வெளியேறினர்; திரு. பாலசுப்பிரமணியமும் உடன் சென்ருர்]

(2-ம் பத்தி தொடர்ச்சி)

10 இலட்சம் செலவில் இந்த அகதிகளைக் குடியேற்றுவதற்கான ஒரு திட்டத்தையும் நாம் வகுத்துள்ளோம்.

அகதிகளின் திறமைக்கேற்ப—தொழில்களில் அவர்கள் ஈடுபடுவதற்கு வசதியாக—அவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன.

மேலும், பற்பல திட்டங்களும் பல நிலைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள் அனைத்திற்கும் இந்திய அரசிடமிருந்து சிறப்புதவி பெற்று அவற்றை முனைந்து செயல்படுத்தவில்லையென்ருல், இவ்வகதிகளின் வருகையால் நமது மாநிலத்திலுள்ள வேலையின்மைச் சிக்கல் மேலும் சீர்கெடும்."

தமிழை ஆட்சிமொழியாக்கும் திட்டம்

நான்கு கட்டங்களாக நிறைவேற்றப்படும்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காட்டும் ஆர்வம் — அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 1—

"மாவட்ட நிர்வாகத்தில் தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள்; தமிழைப் படிப்படியாக ஆட்சி மொழியாக்கும் திட்டம் நான்கு கட்டங்களாகப் பிரித்து நிறைவேற்றப்பட்டு வருகிறது; ஆங்கிலத்தின் இடத்தைத் தமிழ் கைப்பற்றிவருகிறது; தமிழ் அறியாதவர்களுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படும்; தமிழும் ஆங்கிலமும் தவிர வேறு எந்த மொழியும் பதிவேடுகளில் இடம்பெறாது; மொழிவாரிச் சிறுபான்மையினருக்குக் கல்வி நிலையங்களில் வசதி செய்து கொடுக்கப்படுமேயன்றி, ஆட்சி நிர்வாகத்தில் தனி வசதி இல்லை"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் விளக்கமளித்தார். மேலும் அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"மெல்ல மெல்ல—பழகப் பழகத்தான் பல நல்ல தமிழ்ச் சொற்கள் பொருத்தமானதாகக் கிடைக்கும். 'டைரெக்டர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'நெறியாளர்' என்றும், 'இயக்குநர்' என்றும் தமிழில் கூறிவந்தார்கள்; நெறியாளர் என்பது கொள்கைகளை நெறிப்படுத்துபவர்களைக் குறிப்பிடவே பொருத்தமாக இருக்கும்; 'இயக்குநர்' என்பதுதான் சரியாக இருக்கும் என்று கூறி, இப்போது அந்தச் சொல்லையே பயன்படுத்தும்படிக் கூறப்பட்டிருக்கிறது.

"'எஞ்சினீயர்' என்பதற்கு, 'பொறியியலாளர்' என்றும், 'பொறியியல் வல்லுநர்' என்றும் கூறப்பட்டு, இப்போது, 'பொறியர்' என்ற சொல்லே வழக்கிற்கு வந்துவிட்டது; 'கமிஷனர்' என்ற சொல்லுக்கு 'ஆணையர்' என்ற தமிழ்ச் சொல் வழக்கில் இருந்துவருகிறது.

"'சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப் பழக்கம்' என்பது போல், பழகப்பழக்கத்தான் பல நல்ல தமிழ்ச் சொற்கள் கிடைக்கும்.

"முன்பெல்லாம், ஐந்தாவதுவரையில் தமிழ் படித்துவிட்டு அதன் பிறகு எல்லாம் ஆங்கிலமாகவே படித்தவர்கள் கலெக்டர்களாக இருந்தார்கள்; இப்போது அப்படியல்ல; நல்ல தமிழ் ஆர்வம் படைத்தவர்கள், மாவட்ட ஆட்சியாளர்களாக இருக்கிறார்கள்.

"எனவே, நல்ல தமிழ்ச் சொற்களையெல்லாம் கையாண்டு தமிழை ஆட்சிமொழியாக்கும் நடவடிக்கைகள் மெல்ல மெல்ல எடுக்கப்படும்.

"தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழில் பதில் எழுதுவது முதல் கட்டமாகவும், ஓர் அலுவலகத்திலிருந்து மற்றோர் அலுவலகத்துக்குத் தமிழில் கடிதப் போக்குவரத்தைத் தமிழில் நடத்துவது இரண்டாவது கட்டமாகவும், ஒரு துறையின் தலைமை அதிகாரிக்கும் — அவருக்குக் குறைந்த அதிகாரமுள்ள அதிகாரிக்குமிடையே தமிழில் கடிதப் போக்குவரத்து நடத்துவதை மூன்றாவது கட்டமாகவும், தலைமைச் செயலகத்தோடு தமிழில் தொடர்புகொள்வதை நான்காவது கட்டமாகவும் கொண்டு தமிழை ஆட்சிமொழியாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதை விரைவுபடுத்தும் முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படும்."

கேரளத்திலும் சு.ம. திருமணச் சட்டம்

காங்கிரசுக்காரர் மசோதா தாக்கல்

திருவனந்தபுரம், மார்ச் 2—

சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாக்க வழிசெய்யும் மசோதா ஒன்றினை காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. என். கணபதி என்பவர் கேரளச் சட்டமன்றத்தில் கொண்டுவந்திருக்கிறார்.

பேருந்துகள் செல்லும் ஊராட்சியின் சாலைகள்

அரசு ஏற்பது குறித்து அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 2—

"ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் போகும் புதிய சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பை பெருவழித் துறைக்கு மாற்றுவதற்குத் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை"

என்று, சட்டமன்றத்தில் பதிலளித்த பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி, மேலும் துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"பேருந்துகள் செல்லும் சாலைகள் ஊராட்சிகளில் இருந்தால், அவற்றை படிப்படியாகவும், இருக்கும் நிதி வசதிக்கேற்பவும், நெடுஞ்சாலை துறைக்கு மாற்றப்படும்.

"1960-ம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் ஆயிரம் மைல்கள் வீதம் இப்படி நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றுவது என்று கொள்கை வகுக்கப்பட்டு மாற்றப்பட்டுவந்தது; அதன் பிறகு, 'ஆண்டுக்கு 500 மைல் வீதம் மாற்றுவது' என்று வரையறுக்கப்பட்டது; பிறகு, நிதிப் பற்றாக் குறையின் காரணமாக 500 மைல் என்றிருந்தது 250 மைல்களாகக் குறைக்கப்பட்டது; இப்போது அதனை 300 மைல்களாக ஆக்கியிருக்கிறோம். இதுவரையில் மொத்தம் 4,520 மைல் நீளச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

"எந்தெந்தச் சாலைகளை முதலில் எடுப்பது—எதைப் பிறகு எடுப்பது என்பதல்ல; ஒரு சாலையை எடுத்துக் கொள்ளவேண்டிய தன் தேவை — எழுகின்ற கோரிக்கை—இருக்கின்ற நிதி நிலை ஆகியவற்றை அனுசரித்தே எடுத்துக்கொள்ளப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்களின் சாலைகளை அம்மன்றங்களேதான் நிர்வகிக்க வேண்டும்."

என். கிட்டப்பா:—"மாயூரம் நகரில் தற்போது அரசின் பராமரிப்பில் உள்ள இரண்டாம் எண் சாலையை அகலப்படுத்தும் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?"

அமைச்சர்:—"ஆம்; நிதி வசதி கிட்டும்போது இதை, திட்டஇனமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அந்தச் சாலையை அகலப்படுத்தத் தோராயமாக ரூ. 1,25,000 மதிப்பிடப்பட்டுள்ளது."

ஜீவா, கலைமணி நிகழ்ச்சிகள்

மார்ச் 5: சென்னை; 10: திருச்சி; 11: தஞ்சை; 12: வல்லம்; 13: நாச்சியார்கோயில்; 14: நாகப்பட்டினம்.

அமைச்சர் கருணாநிதியின்

நகைச் சுவைப் பதில்கள்

சென்னை, மார்ச் 2—

சட்டமன்றத்தில், சாலைகளை அகலப்படுத்துவது பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டபோது, பி. சோ. கட்சி உறுப்பினர் திரு. வேலுச்சாமி எழுந்து, 'இந்தச் சாலைகளை அகலப்படுத்துவது சம்பந்தமாக ஏதேனும் கொள்கை இருக்கிறதா? அதைப் பற்றி அமைச்சர் விளக்குவாரா?' என்று கேட்டார்.

இதற்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் அளித்த பதில், அவையில் நீண்ட சிரிப்பொலியை எழுப்பிற்று!

"சாலைகளை அகலப்படுத்தினால் போக்குவரத்து சுலபமாக இருக்கும் என்பது கொள்கை! அதற்காக எடுத்துக்கொள்வது முயற்சி!"

இதுதான் அந்த நகைச்சுவையான பதில்!

ஊராட்சியின் சாலைகளை நெடுவழித் துறை நிர்வாகத்திற்கு மாற்றுவது தொடர்பாக எழுந்த கேள்வி—பதில்களையொட்டி ஓர் உறுப்பினர், 'பஞ்சாயத்துக்கள் சாலைகளை பராமரிக்க அதிக நிதி ஒதுக்கப்படுமா?' என்று கேட்டார்.

இதற்கு அமைச்சர் கருணாநிதி பதில் சொல்லும் வகையில் எழுந்து,

"அந்த அமைச்சர் இன்னும் வரவில்லை—இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல"

என்று கூறிவிட்டு அமர்ந்தார்; (அவையில் சிரிப்பொலி எழுந்தது)

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள், அப்போது அவைக்கு வரவில்லை; இக்கேள்வி அவர் துறை தொடர்பான கேள்வியாகையால் இப்படி அவர் பதிலளித்தார்.

★

'சாலைகளை அரசு ஏற்கவேண்டும்' என்று கோரி ஓர் ஊராட்சி மன்றத் தீர்மானம் போட்டிருப்பதாகக் குறிப்பிட்டு, 'அந்தச் சாலைகளை எப்போது அரசு ஏற்கும்' என்று ஓர் உறுப்பினர் கேட்டார்; அதற்கு அமைச்சர் கருணாநிதி,

"பஞ்சாயத்துத் தீர்மானம் போடுவது சுலபம்; அந்தச் சாலைகளை எடுப்பது கஷ்டம்"

என்று நறுக்குத் தெரித்தாற்போல் பதிலளித்ததும் சிரிப்பொலி எழுந்தது.

'பத்திரப் பதிவுத் துறையில் யாரும் வேலைநீக்கம் பெறவில்லை'

புதிய முறையால் யாரும் பாதிக்கப்படவில்லை

சட்டமன்றத்தில் அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, மார்ச் 2—

"பத்திரப் பதிவுத் துறையில் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக யாரும் வேலையிலிருந்து நீக்கப்படவில்லை; புதிய கோப்பு முறை செயல்படுத்தப்பட்டதால் 412-பேர் வேறு வேலைகளுக்கு அனுப்பப்பட்டனர்"

என்று சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், சட்டமன்றத்தில் ஓர் கேள்விக்குப் பதிலளித்தார்.

துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"செக்ஷன் ரைட்டர்கள் என்பவர்களில் இரண்டு பிரிவினர் இருக்கின்றனர்; அதாவது, பட்டியலில் உள்ளவர்கள் (லிஸ்டு); பட்டியலில் இல்லாதவர்கள் (நான்-லிஸ்டு).

"பட்டியலில் உள்ளவர்கள் தேர்வுமூலம் வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படவில்லை; பட்டியலில் இல்லாதவர்களுக்கும் வேலை போய்விடவில்லை.

"பட்டியலில் இல்லாதவர்களுக்கு எப்போதுமே வேலை இருந்தால்தான் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்; வேலை இல்லை 'என்றால், அவர்களுக்கும் வேலை இருக்காது; அப்படி இருந்த 63-பேருக்கு வேலை கொடுக்கப்படவில்லையே தவிர, வேலையில் சேர்ந்தபிறகு வேலையிலிருந்து நீக்கியதாகக் கொள்ள முடியாது; 'வேலை நீக்கம்' என்ற பிரச்சினையே கிடையாது.

"பதிவுத் துறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கோப்பு முறையையும் வருகிற ஏப்ரல் திங்களில் மறு ஆய்வு செய்ய இருக்கிறோம். அந்த முறை ஏற்பட்டதால் வேலைப் பளு ஏற்பட்டதாகக் கூறப்படுவது சரியல்ல.

"புதிய முறையை, 'தவறு' என்று சொல்ல முடியாது; அந்த முறை ஏற்கனவே சில முறைகளில் இருந்துவந்திருக்கிறது. எல்லாப் பகுதிகளுக்கும் பரவலாக்கியிருக்கிறோம். ஓராண்டு கையாண்டு பார்த்தபிறகு நாம் எல்லோரும் சேர்ந்து அதனைப் பரிசீலித்து முடிவு எடுப்பதுதான் நியாயம். ஏற்கனவே அந்த முறை இந்த மன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது; மீண்டும் ஏப்ரலில் பரிசீலிப்போம்."

உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் அனைவருக்கும் ஓய்வுகால ஊதியம்

சட்டத்தைத் திருத்தத் தமிழக அரசு முடிவு — அமைச்சர் முத்துசாமி அறிவிப்பு

சென்னை, மார்ச் 2—

"உள்ளாட்சி மன்றங்களில் வேலைபார்க்கும் எல்லா ஊழியர்களுக்கும் ஓய்வுகால ஊதியம் (பென்ஷன்) கொடுக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?"

என்று சட்டமன்றத்தில் திரு. வி. கே. கோதண்டராமன் கேட்ட கேள்விக்கு அமைச்சர் திரு. முத்துசாமி பதிலளித்ததாவது:—

"நகராட்சிகளின் சில பதவிகளை மாநில அரசின்கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன் 1920-ம் ஆண்டைய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தைத் திருத்தும் ஆலோசனை இருந்துவருகிறது; அவர்கள் மாநில அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டால் ஓய்வுகால ஊதியம் கிடைக்கும்; இது முடிந்தபின், ஊராட்சி மன்ற ஊழியர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படும்.

"முன்னாள் அரசினர் இந்தச் சட்டத்தைத் திருத்த முயற்சி எடுத்த பிறகு எந்தக் காரணத்தாலோ அந்த முயற்சியை நிறுத்திவிட்டனர்; அந்த முயற்சியைத்தான் இப்போது இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது."

காசிராமன் (காங்):— "பென்ஷன் இருக்கட்டும்; சம்பளமாவது மாநில அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கும் அளவுக்குக் கிடைக்க வழி செய்யப்படுமா?"

அமைச்சர்:— "பென்ஷனுக்காக அல்ல சட்டத்தைத் திருத்துமுனைவது. சட்டத்தைத் திருத்தம் செய்யும்போது பென்ஷன் கொடுப்பது பற்றி ஆராயப்படும் என்றுதான் கூறினேன். கடந்த இருபது ஆண்டுக்காலமாக இந்தச் சட்டம் திருத்தப்படாமலே இருந்திருக்கிறது என்பதையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன்."

புதுடில்லியில் வீசும் விஷக்காற்று

தென்னகத்தின் 'தென்ற'லால் மாறட்டும்!

செ. கந்தப்பன் இடித்துரை

புதுடில்லி, மார்ச் 3—

"ஒரு கூட்டத் தொடர் நடக்கும் கால அளவுக்காவது நாட்டின் தலைநகரை தென்னகத்தில் எங்காவது ஓர் இடத்துக்கு மாற்றுவது, நாட்டின் அரசியல்—சமூக —கலாச்சாரத் துறையில் நல்ல சூழ்நிலையை உருவாக்கும்."

"கலக்கமடைந்துள்ள உறுப்பினர்களின் உள்ளங்களை, தென்னகத்தின் தென்றல் காற்று குளிர்ச்சியடையச் செய்யும் என்று நம்புகிறேன்"

என்று மக்களவையில், 'நாடாளுமன்றக் கூட்டத் தொடரை தென்னக மாநிலத்திலும் நடத்தவேண்டும்' என்ற தனிநபர் மசோதாவின் மீது பேசுகையில் கழக உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"விடுதலை பெற்றதற்குப் பின்பு புதுடில்லியில், வரம்பு மீறிய அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. டில்லியினுள் இந்தி தெரியாத தென்னக மக்கள், அந்நியர்கள் போலவே நடத்தப்படுகின்றனர் என்பது இதிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது.

"புதுடில்லியில் இப்போது ஒரு வித விஷக் காற்று பரவி இருக்கிறது!

"தென்னகத்தில் உள்ள பெங்களூரில் நாடாளுமன்றம் கூடினால் அங்குள்ள மக்கள் எந்த அளவுக்குப் பண்புடன் நடந்துகொள்கிறார்கள் என்பதையும், வடநாட்டில் இருப்பவர்களைப் போலவே அங்குள்ளவர்களும் நாட்டுப் பற்று மிக்கவர்கள்தாம் என்பதையும் வடவர் கண்டறிய ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்."

ஜி. டி. நாயுடுவுக்குப் பண முடிப்பு

திருச்சி, மார்ச் 1—

சென்னையில் நடைபெறவிருக்கும் கோவை திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் 75-ம் ஆண்டு விழாவின்போது, அவர் செய்துவரும் விஞ்ஞான ஆராய்ச்சி—விவசாய ஆராய்ச்சி — சித்த மருத்துவ ஆராய்ச்சி ஆகியவைகளுக்குப் பயன்படுவதற்காக ஒரு பண முடிப்பு வழங்கப்பெறும். அது இலட்சக்கணக்கில் இருக்கவேண்டும் என்பது தமிழ் மக்களின் விருப்பம்; ஆகவே தமிழக மக்கள் ஒவ்வொருவரும் தாராளமாக நிதியை அனுப்பி உதவுமாறு திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் கேட்டுக்கொள்கிறார்.

கோ. சி. மணி

சுற்றுப்பயணம்

மார்ச் 5: சாரநத்தம்; 6: குடந்தை, எடையிருப்பு; 10: முத்துப்பேட்டை, சுண்டை; 11: கூத்தாநல்லூர்; 12: நீலவெளி; 15: திருவில்லிபுத்தூர்; 16: சிவகிரி; 17: நெல்லை.

நடக்க இருப்பவை

மார்ச் 6: தி. மு. க. அரசு ஓராண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டங்கள்

சென்னை 46-வது வட்டம்

லாக்குமாநகர் கலைஞர் கருணாநிதி அறிவு வளர்ச்சி மன்றத் துவக்க விழா—கழக அரசு ஓராண்டு நிறைவு விழா; மாலை 7-மணிக்கு குட்டியப்ப கிராமணி தெருவில் (உமா தியேட்டர் அருகில்); மன்றத் திறப்பாளர்: பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி.; பேசுவோர்: சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ. ஆர், கிருட்டினன், ஈரோடு சின்னசாமி, விருதுநகர் சீனிவாசன், ஓ. பி. இராமன், மற்றும் கே. வி. பார்த்தசாரதி, கோ. தேவராசன், மற்றும் பலர்.

கடலூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பிடாரியம்மன் கோயில் தெருவில்; தலைவர்: கே. செயராமன் எம்.சி.; கொடியேற்றுபவர்: சி. எஸ். மணி; மன்றத் திறப்பு: சி. கோவிந்தராசன்; பேசுவோர்: வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., மா. பீட்டர், கி. தண்டபாணி எம்.சி., எஸ். டி. சதாசிவம், சி. இராமன்.

சாத்தூர்

நகர தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: எஸ். கருப்பசாமி; பேசுவோர்: கே. எஸ். சந்தானம் எம்.சி., டி. ஆர். இராசன் பி.ஏ.பி.எல்., செ. அய்யாச்சாமி, எஸ். எஸ். உசேன், இரா. அருணாசலம், இரா. கருப்பசாமி, பா. நடராசன்.

நாச்சியார்கோவில்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வடக்கு வீதியில்; தலைவர்: சா. அழகிரி; பேசுவோர்: எஸ். ஆர். இராதா எம்.சி., அ. சர்புதீன், இரா. கேசவன், மு. இஸ்மத் பாட்சா, வி. கே. இராமசாமி, பொ. கோவிந்தராசன், கே. பி. வேலாயுதம், தி. இராமலிங்கம், எம். பன்னீர், எஸ். எம். அலாவுதீன். (மாலை 5-மணிக்கு பொன்னையன்—கன்னையன் இசை நிகழ்ச்சி நடைபெறும்).

தம்மம்பட்டி

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: மு. செயராமன்; பேசுவோர்: ப. க. தமிழழகன், எம். மாரிமுத்து எம்.எல்.ஏ., ஜி. என். பெரியசாமி, மற்றும் பலர்.

மதுரை

நகர் தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மேங்காட்டுப் பொட்டலில்; தலைவர்: என். நாராயணசாமி; பேசுவோர்: நீ. அன்புச்செழியன் எம்.பி., எஸ். முத்து எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., கூடலரசன், கே. எஸ். சந்தானம் எம்.சி., எம். எம். முத்தரசு.

கிரனூர் (பழனி வட்டம்)

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு என்:எஸ்.கே. திடலில்; தலைவர்: கருப்பண்ணன்; பேசுவோர்: தம்பித்துரை, ஜீவா, ஏ. பி. சதக்கத், பி. குப்புசாமி, சலாவுதீன், பி. சி. முத்து.

அருப்புக்கோட்டை

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு தியாகராயர் வாலிபர் சங்கத் திடலில்; தலைவர்: சிவ. சண்முகசுந்தரனார்; பேசுவோர்: எம். எஸ். இராமசாமி, ப. பெ. ந. நல்லதம்பி, ஆ. குருசாமி.

நாகை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அபிராமி அம்மன் திடலில்; தலைவர்: ஆர். கல்யாணசுந்தரம்; பேசுவோர்: அமுதா ராகவன், எஸ். தியாகராசன் பி.ஏ.பி.எல், எஸ். எம். இரங்கசாமி எம்.சி., எஸ். முருகையன் பி.ஏ.பி.எல்., காசா லைதீன், எஸ். யூசுப்.

★

விழா நிகழ்ச்சிகள்

சென்னை 2-வது வட்டம்

தி. மு. க. கிளையின் சார்பில் காலை 9-மணிக்கு வட்டக் கழகப் பணிமனையில் செயலாளர் சே. அரசு தலைமையில், தோழர்கள் மு. வேதாசலம் எம்.எல்.ஏ., கு. இராமலிங்கம் எம்.சி. ஆகியோர் பேசுவர்; 500 சிறுவர்கட்கு இனிப்பு வழங்கப்படும்

சென்னை 25-வது வட்டம்

எம் ஜி. ஆர். மன்றச் சார்பில் காலை 7-மணிக்கு (இரத்தின முதலித் தெருவில்) சி. அ. இரத்தினம் தலைமையில் எம். ஆர். கண்ணன் எம்.எல் ஏ. கொடியேற்றுவார்; ந. ர. வீரஜின்னு இனிப்பு வழங்குவார்; எஸ். இராகவானந்தம் எம்.சி, இரா. நடராசன், என். வி. என். செல்வம் ஆகியோர் பேசுவர்; மாலை 7-மணிக்கு இசைத்தட்டு நடன நிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 27-வது வட்டம்

திருவள்ளுவர் முன்னேற்றக் கழகச் சார்பில் காலை 8-மணிக்கு எம். ஆர். சந்திரன் தலைமையில் இனிப்பு வழங்கப்படும்.

எழுமலை

தி. மு. க. சார்பில் மாணவர் இராசேந்திரன் நினைவு மன்றத்தில் இரா. சு. தங்கராசன் தலைமையில் ஆயிரம் பேருக்குச் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும். மாலை இராசேந்திரன் நினைவு மன்றப் படிப்பகத் திறப்பு விழாவும், கொடியேற்றுதலும்; பேசுவோர்: ஐ. செயராமன் பி.எஸ்சி, நெல்லை மாறன், ஆனந்தகிருட்டினன்.

கைத்தறிப் பொருட்காட்சி

தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சார்பில் சென்னை பாந்தியன் சாலையில் நடைபெறும் பொருட்காட்சியில், 5—3—68 மாலை 6-மணிக்கு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமையில், திருமதி இராஜேசுவரி நடராசன் பி ஏ சொற்பொழிவாற்றுவார்; 7-மணிக்கு 'நீதி நிலைத்தது' என்ற நாடகம் நடைபெறும்; நுழைவுக் கட்டணம் இல்லை.

மாநகராட்சி அங்காடி அடிக்கல் நாட்டு விழா

சென்னை 40-வது வட்டம் ராட்லர் தெருவில், மாநகராட்சி அங்காடிக்கான அடிக்கல் நாட்டு விழா 5—3—68 மாலை 6-மணிக்கு மேயர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்; அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அடிக்கல் நாட்டுவார்.

செல்வி இரஷ்யா அமெரிக்கப் பயணம்

குத்தூசி குருசாமி அவர்களின் புதல்வி டாக்டர் செல்வி கே. ஜி. இரஷ்யா, குடும்பக் கட்டுப்பாட்டுப் பயிற்சி பெற 5—3—68 அன்று அமெரிக்கா செல்வதாக அறிவிக்கப்படுகிறது.

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

கழக அரசின் படி அரிசித் திட்டத்திற்கு இப்போது நல்ல விளம்பரம், காங்கிரசுத் தரப்பிலிருந்துதான் அதிகம் கிடைக்கிறது!

நிதி நிலை அறிக்கையின்மீது பேசும் முன்னாள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரும், 'படி அரிசி' பற்றிப் பேசத் தவறவில்லை! இது ஒன்றே, 'அவர்களைப் படி அரிசி'த் திட்டம் எவ்வளவு பயப்பட வைத்திருக்கிறது' என்பதனைக் காட்டுகிறது!

'ஏன் கிராமங்களுக்கு இல்லை' என்பதனைத் திரும்பத் திரும்பக் கேட்பதும், 'மற்ற நகரங்களுக்கு விரிவாக்குவது எப்போது' என வினவுவதும், இதுவரையில் இத்திட்டம் அமுலாகியிருப்பதில் உள்ள மகத்துவத்தைத்தான் வெளிப்படுத்துகிறது!

'படி அரிசித் திட்டத்தைக் கண்டிக்கிறோம்' என்ற நினைப்பில் காங்கிரசுக்காரர்கள், எந்த அளவுக்குத் தீவிரம் காட்டுகிறார்களோ அந்த அளவுக்குத் திட்டத்துக்கு மறைமுகமாக விளம்பர உதவி செய்தவர்களாகிறார்கள்!

திரும்பத் திரும்பக் கூறினால், அவதூறுகள்—அபாண்டங்கள்' உண்மையாகிவிடுமென்ற கருத்தில் காங்கிரசுக்காரர்கள் பேசுகிறார்களென்றால், அந்தத் தந்திரமும் அவர்களுக்குத் தோல்வியைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறது!

ஏனெனில், அவ்வப்போது கழக உறுப்பினர்கள் தரும் புதிய புதிய விளக்கங்கள், காங்கிரசாரின் பொருந்தாத விமரிசனங்களுக்கு நல்ல மருந்தாக அமைகிறது!

கழகத்துக்கு எதிராகச் சில சமயங்களில் நகர மக்களையும், சில சமயங்களில் கிராம மக்களையும் 'ஏவி'விடும் 'தந்திரம், காங்கிரசுக் கட்சிக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல! இந்த முறையில் அவர்கள், வெற்றியும் கண்டதில்லை! பொதுத் தேர்தல் முதல் பல இடைத் தேர்தல்கள் வரையில் இதனை மெய்ப்பிக்கின்றன!

'படி அரிசி நகரங்களுக்கு மட்டும்தானா?' என்று கேட்டு, கிராம மக்களின் நலம் பேணுபவராகத் தம்மைக் காட்டிக்கொள்ள நினைத்த காங்கிரசு உறுப்பினர் திரு. மார்டினுக்கு "என்ன செய்வது! ரேஷன் முறையினைக் காங்கிரசு அரசாங்கம், 'நகரங்களுக்கு மட்டும்தான்' என்று வைத்துப் போயிருக்கிறது" என்ற வகையில் செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் தந்துள்ள பதில் அத்தரப்பில் இருந்தவர்களுக்கு, 'கேள்வி ஏன் பிறந்தது?' என்ற 'கவலை'யினைக் கொடுத்திருக்க வேண்டும்!

மூன்றும் நாளான சனிக்கிழமையன்று நிதிநிலை அறிக்கை மீது, ஒன்பது கழக உறுப்பினர்கள் கருத்துரை வழங்கியிருக்கின்றனர்.

"மிகக் குறைந்த நிதிநிலை இருப்பில் தயாரிக்கப்பட்ட மிக நேர்த்தியான பட்ஜெட்" எனப் பாராட்டியிருக்கும் **வி. எஸ். கோவிந்தராசன்,** 'பற்றுக்குறையை அகற்றவும், அளவு முறையினைப் படிப்படியாக அகற்றவும்தான் படி அரிசித் திட்டம் அமுலாக்கப்பட்டது' என்ற அடிப்படைக் காரணத்தையும் தந்திருக்கிறார்!

தமிழக அரசு அமுலாக்கப்போகும் 'பரிசுச் சீட்டு' முறை பற்றி முன்கூட்டியே 'அதிருப்திபாளர்'களாக மாறியுள்ள காங்கிரசுக்காரர்களுக்கு, கே. செயராமன், மிகப் பொருத்தமான விளக்கம் ஒன்றினைத் தந்திருக்கிறார். மத்திய அரசின் பரிசுப் பத்திர முறையை இங்கே உள்ள காங்கிரசுக்காரர்களுக்கு அவர் சற்று நினைவுபடுத்தி, "அதனைவிட, கழக அரசின் 'பரிசுச் சீட்டு' முறை எந்த அளவு தவறு" என்று கேட்டிருக்கிறார்!

"புதுடில்லியின் பட்ஜெட்டினைப் பார்த்த பின்னரும் தமிழக நிதிநிலை அறிக்கையினைக் குறைகூறிப் பேச எப்படிக் காங்கிரசுக்காரர்களுக்கு மனம் துணிகிறதோ" என வியந்திருக்கிறார்—**சி. கோவிந்தராசன்!** அப்படிக் குறைகூறுபவர்கள், 'பட்ஜெட்டினை முழுவதும் படிக்காதவர்களாகத்தான் இருப்பார்கள்' என அவர் முடிவுகொண்டிருப்பதில் தவறு இல்லையல்லவா?

ஆசிரியர்களுக்குக் காலமறிந்து உதவியுள்ளதாக நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டியிருக்கிறார்—**பி. துரைராஜ்;** செகண்டரி கிரேடு படிப்பு இருந்தும் ஹையர் கிரேடு ஊதியம் மட்டும் பெற்றுவந்த நிலையை இந்த நிதிநிலை அறிக்கை மாற்றியமைத்திருப்பதற்கு ஆங்காங்கே உள்ள ஆசிரியர் சங்கங்கள் நிறைவேற்றி வைத்திருக்கும் நன்றித் தீர்மானங்களை துரைராசு அவர்களின் உரை நினைவுபடுத்துவதாக இருக்கிறது!

"மத்திய அரசின் நிதிக்குழுவில் மாநில முதல் அமைச்சர்கள் இடம்பெற வேண்டும்" என்ற கவனிக்கத்தகுந்த யோசனையை, **எம். கண்ணப்பன்,** தமது உரையில் வெளியிட்டிருக்கிறார்; 'மாநில அளவில் திட்டக்குழு வேண்டும்' என அவர் குறிப்பிட்டிருப்பதும், கழகத்தின் நெடுநாளைய கருத்தே ஆகும்!

அமோக அறுவடையைத் தந்து, கழக நிர்வாகத்துக்குப் பெருமை தேடிய தஞ்சை மாவட்டத்துக்குச் சொந்தக்காரர்—என்ற முறையில் **என். கிட்டப்பா,** சென்ற ஆண்டில் 2 இலட்சம் டன் அதிக விளைச்சலைப்பற்றிப் பாராட்டியுள்ளார். பொதுப் பணி அமைச்சர் குடந்தை விவசாயிகள் மாநாட்டில் காட்டிய நேரடி ஆர்வம், மாவட்டத்தின் அமோக விளைச்சலுக்குப் பெரிதும் உதவியுள்ளதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

"தென் ஆற்காடு மாவட்டம் விருத்தாசலம் பகுதியிலுள்ள வெலிங்டன் நீர்த் தேக்கம் மராமத்து செய்யப்படுவது உடனடித் தேவை" என்பதனை **ஏ. கிருஷ்ணன்** கோரியிருக்கிறார்! முன்னைய நிர்வாகத்தில் ஓர் அமைச்சரையே தொகுதி உறுப்பினராகக் கொண்டிருந்தும், இந்த நீர்ப்பாசன ஏரி பழுது பார்க்கப்படாமல் இருந்த பரிதாப நிலையினை, கழக நிர்வாகத்தில் அகற்றுவதற்கான முயற்சிகள் தேவை என்பதனை அவரது கோரிக்கை உணர்த்துகிறது!

அண்ணாவின் நிதிநிலை அறிக்கையினை, 'இயற்றலும் ஈட்டலும்' என்ற குறட் பாவுடன் ஒப்பிட்டுப் பாராட்டியிருக்கும் **புலவர் பொன்னம்பலம்,** உவமை நயத்தில் மேலும் ஒரு படி சென்று, 'முன்பு காங்கிரசு நிர்வாகத்தின் நிதிநிலை அறிக்கைகள் விதித்த வரிகளினால் பொதுமக்கள் வயிறெரிந்தனர்; இப்போதைய நிதிநிலை அறிக்கையில் வரிகளே இல்லை; ஆனால் காங்கிரசுக்காரர்கள் வயிறெரிகிறார்கள்' என்று சுவைபடச் சொல்லியுள்ளார்!

மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கடன்களைத் திருப்பித் தருவதே ஒரு முக்கியப் பிரச்சினையாக இருப்பதனை, கிராமிய வழக்கு ஒன்றின்மூலம் அருமையாக விளக்கியிருக்கிறார்—**என். கிருஷ்ணன்;** 'வட்டிக்குக் கடன் வாங்கி அட்டிகை செய்து, பிறகு அட்டிகையை விற்று வட்டியைக் கட்டுவதுபோல் இருக்கிறது' என்று மாநிலங்களின் கடன் சுமைகளைப்பற்றி அவர் கூறியிருக்கும் உதாரணம், திரும்பத் திரும்பப் படித்துச் சுவைக்கக்கூடிய ஒன்றாகும்! புள்ளிவிவரங்கள் பல தெரிவிக்கும் உண்மைகளை, மிகச் சுலபமாக இந்தப் பழமொழி தெரிவித்துவிடும்!

தமிழக மேலவை உறுப்பினர் எண்ணிக்கை

இடைத்தேர்தலுக்குப்பின்னர் உயரக்கூடும்

புதுடில்லி, மார்ச் 3—

"தமிழகச் சட்டமன்ற மேலவையில் உள்ள உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்தும்படி தமிழக அரசிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது; ஆனால் மார்ச் திங்களில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்கள் முடிவதற்குமுன் அவ்வாறு எண்ணிக்கையை உயர்த்துவது இயலாது"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் எஸ். கே. சம்பந்தம் கேள்விக்குப் பதிலளிக்கையில் சட்ட அமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன் கூறினார்.

இடைத்தேர்தல்கள் முடிந்ததும் தமிழக அரசின் கோரிக்கைக்கு இணங்கக்கூடும் என்றும், மற்ற மாநிலங்களும் அவ்வாறு எண்ணிக்கையை உயர்த்த விரும்புகின்றனவா என்று கேட்கப்பட்டிருப்பதாகவும், அவைகளின் பதில்கள் கிடைத்ததும் அதுபற்றி கவனிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு டில்லியே காரணம்

மைசூர் கல்வியமைச்சர் குற்றச்சாட்டு

"கருநாடக மாநிலத்தில் எழுந்துள்ள மொழிக் கிளர்ச்சிக்கு நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள மொழித் தீர்மானமும், இந்தி வெறியர்களும்தான் பொறுப்பு"

என்று மாநில கல்வியமைச்சர் சங்கர கௌடா, மைசூர் சட்டமன்ற மேலவையில் பேசும்போது கூறினார்.

"மொழித் தீர்மானத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்துள்ள மாணவர்களிடம், என்னால் அனுதாபம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை" என்றும் அவர் கூறினார்.

"மத்திய அரசில் பணியாற்ற விரும்பும் வட இந்தியர்களை, இந்தியோடுகூட ஆங்கிலத்திலும், ஒரு தென்னிந்திய மொழியிலும், பயிற்சி பெறும்படி டில்லி அரசு வற்புறுத்தும்" என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மனிதன் உறங்கும் நேரம் குறையும்!

மாத்திரைகளை விழுங்கும் வழக்கம் வரும்

"உலகில் ஏற்பட்டுவரும் புரட்சிகரமான மாறுதல்களின் விளைவாக, அடுத்த 20 ஆண்டுகளில், ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு நாளும் 4 மணி நேர உறக்கம் இருந்தால் போதும்; சில வகை மருந்துகளைப் பயன்படுத்தினால் பல நாட்கள் உறங்காமலேயே வேலை செய்ய முடியும்; ஆனால் இதன் காரணமாக, எடுத்ததற்கெல்லாம் மாத்திரைகள் சாப்பிடும் கெட்ட வழக்கம் ஏற்பட்டுவிடும்"

என்று, டாக்டர் எம். என். பாய் என்ற மனவியல் மருத்துவ நிபுணர் மங்களூரில் பேசுகையில் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.